
# திருத்தப்பட்டதொரு முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்திற்கான (MMDA)

# குடும்ப நீதிமன்ற முறைமை





## A. அறிமுகம்

மார்ச் 08, 2021 அன்று, காதி முறைமையினை இல்லாதொழிப்பதென அமைச்சரவை தீர்மானம் ஒன்றை மேற்கொண்டது. இவ்விடயம் தொடர்பாகப் பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்று வருகின்றன. இத்தீர்மானமானது, MMDA இனை முற்றாக இல்லாதொழிப்பதற்கான, விரோதத்துடனான நடவடிக்கை என்று ஒரு சாராராலும், திருத்தங்களை நோக்கிய முற்போக்கான நகர்வு என மற்றுமொரு சாராராலும் நோக்கப்பட்டது.

பல வருடங்களாகக் காதி முறைமையினைத் திருத்துவதற்காய்ப் பரிந்துபேசி வந்தவர்களைப் பொறுத்தளவில், அமைச்சரவையின் இத்தீர்மானம், ஏற்கனவே இல்லாதிருந்த, புதியதொரு தெரிவினை வழங்கியுள்ளது. காதி முறைமையினை இல்லாதொழித்தல் வேண்டும் அல்லது இல்லாதொழிக்கக் கூடாது என்பதற்காக முன்வைக்கப்படுகின்ற வாதாட்டங்களில், ஒரு போலித்தனமான இருமை சிக்குண்டிருப்பதனை MPLRAG அடையாளங் காண்கிறது. அதுமட்டுமன்றி, இச்சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி இனவாத மற்றும் முஸ்லிம் எதிர்ப்பு உணர்வுகள், முஸ்லிம் பெண்களது நியாயமான கோரிக்கைகளின் கீழ் தம்மைப் பதுக்கிக் கொண்டு, தமது சுயநலனுக்கான தீய நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக திருத்தங்களுக்காகப் பரிந்து பேசுகின்றன என்பதையும் MPLRAG அடையாளங் காண்கிறது. ஆகவேதான், இதில் சம்பந்தப்பட்டுள்ள பல்வேறு விளைவுகள் பற்றிய புரிதலுடன் இவ்விவாதத்தினை அணுகுதல் அவசியமாகின்றது. காதி முறைமையின் கீழான அனுபவமானது மாவட்ட நீதிமன்ற முறைமைக்கு எதிராகச் சீர்தூக்கிப் பார்க்கப்படல் வேண்டும். அதுவே பின்னர், திருத்தப்பட்டதொரு MMDA வில் உள்வாங்கப்படத்தக்கதாக இருக்கும்.

இத்தருவாயில், மேற்கொள்ளப்படும் தீர்மானமானது, இரு முறைமைகள் தொடர்பாகவுமுள்ள தகவல்களையும், அனுபவங்களையும் கருத்திலெடுத்து, துணைவர்களுக்கும், குடும்பங்களுக்கும் எது நீதியை வழங்கும் முறைமையாக ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதாய் அமையக் கூடும் என்ற மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்படல் வேண்டும். மேலும், அமைச்சரவையின் தீர்மானம் தொடர்பான எந்தவொரு பதிலிறுக்கைகளும், இரு முறைமைகளிலும் உள்ள சிக்கல்தன்மைகளைக் கருத்தில் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அது பற்றிய விவாதமானது சுலபமாக இது அல்லது அது என்ற இருமையான தெரிவுக்குள் சுருக்கி விட்டுவிடப்படக் கூடாது. இவ்விவாதத்தைக் கொண்டு செல்வதிலுள்ள மற்றுமொரு சவால், முன்வைக்கப்பட்டுள்ள திருத்தங்கள் எத்தகைய நடபடியையும், முறைமையையும் கொண்டிருக்கப் போகின்றன என்பது தொடர்பாக பொதுமக்களுக்கு எதுவிதமான தகவல்களும் தெரியப்படுத்தப்படாமல் இருக்கின்றமையாகும். தற்போது, MMDA ஆனது காதிகளினால் நிர்வகிக்கப்படுகின்றது.

'நன்னடத்தையுடைய'வர்களாகக் கருதப்படுகின்ற முஸ்லிம் ஆண்கள் மட்டுமே இந்தப் பதவியில் அமர்த்தப்பட முடியும். அவர்கள், பராமரிப்பு, விவாகரத்து, மஹரினைத் திருப்பியளித்தல் தொடர்பான முடிவுகளை எடுப்பதற்கான அதிகாரத்தினைக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் பிள்ளைகளது பாதுகாவல்/கட்டுக்காவல் தொடர்பாகத் தீர்மானிக்க முடியாது. அது தொடர்பான அதிகாரம் இலங்கையின் மாவட்ட நீதிமன்றங்களுக்கே உண்டு. மேன்முறையீடுகளை காதிகள் சபை(கொழும்பிலும், கல்முனையிலும் சனிக்கிழமைகளில்) செவிமடுக்கின்றது. அதற்கடுத்த கட்டமான மேன்முறையீடுகளை இலங்கையின் மேன்முறையீட்டு நீதிமன்றமும், உச்சநீதிமன்றமும் செவிமடுக்கும். மாவட்ட நீதிமன்ற முறைமையானது: (i)பயிற்றுவிக்கப்பட்ட நீதித்துறை அலுவலர்களைக் கொண்டது, (ii) நடபடிரீதியாக பிரதானமாக குடியியல் நடபடிக் கோவையினால் ஆளப்படுகின்றது, (iii) அனைத்து குடியியல் வழக்குகளையும் விசாரிப்பதற்கான முதன்மை நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ளது, (iv) அத்துடன் இரு வகையான மேன்முறையீட்டுக்கான வழியைக் கொண்டுள்ளது- அவையாவன, குடியியல் மேன்முறையீடுகளுக்கான மேல்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றம்.


இந்த ஆக்கமானது பின்வரும் அடிப்படையில் அளிக்கை செய்யப்படுகின்றது:

1. MPLRAG இனது, திருத்தத்திற்கான கோட்பாட்டுரீதியான சட்டகம்
2. நல்லதொரு குடும்பச் சட்ட முறைமையின் கூறுகளும், அதற்கான அளவுகோலும்
3. காதி முறைமை மற்றும் மாவட்ட நீதிமன்றம் ஆகிய இரு முறைமைகளையும் பிரயோகித்து, பெண்களது வாழ்வியல் யதார்த்தங்களை ஒப்பீடு செய்தல்
4. தற்போதைய காதி முறைமையின் பின்னணியைப் புரிந்து கொள்வதற்காக அதைப் பற்றியுள்ள புனைவுகளைப் பற்றிப் பேசுதல்
5. MPLRAG இனது நிலைப்பாடு

## B. MPLRAG இனது, திருத்தத்திற்கான கோட்பாட்டுரீதியான சட்டகம்

நாம் கலந்துரையாடும் அனைத்து திருத்தங்களிலும் நாம் பயன்படுத்துகின்ற, MPLRAG இனது, திருத்தத்திற்கான கோட்பாட்டுரீதியான சட்டகமானது, நிலைபேறான முறையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதற்காக பின்வருவனவற்றைத் தேவைப்படுத்துகின்றது


### 1.இலங்கை முஸ்லிம் பெண்களது சமகால வாழ்வியல் யதார்த்தங்கள்



மேலே குறிப்பிட்டபடி, காதி முறைமையின் கீழ் இலங்கை முஸ்லிம் பெண்கள் எதிர்கொண்ட அனுபவங்களின் அடிப்படையில் அவர்களது வாழ்வியல் யதார்த்தங்களுக்கு இம்முறைமை பதிலிறுத்தல் வேண்டும். அதுமட்டுமன்றி, பொதுவாக, தற்போதுள்ள மாவட்ட நீதிமன்றங்களுக்கு முன்னால் இலங்கையின் குடும்பங்கள் முகங்கொடுக்கின்ற யதார்த்தங்களுக்கும் பதிலிறுத்தல் வேண்டும்.

### 2. இஸ்லாமிய கொள்கைகளும், இஸ்லாமிய சட்டவியல் மற்றும் சட்டப் பாரம்பரியத்தின் பன்மைத்துவமும்

அல்குர்ஆன், நீதி என்பதனை மீயுயர் அறமாகக் காண்கிறது. நீதிக்கும், இஹ்ஸான் (இரக்கம்/கருணை) தக்வா (இறையச்சம்) போன்ற ஏனைய மேன்மையான விழுமியங்களுக்கும் இடையே மிக நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது.




**“அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகின்றான். நம்பி உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அமானத்-அடைக்கலப் பொருள்களை அவற்றிற்குரியவர்களிடம் நீங்கள் ஒப்படைத்து விடுங்கள்; நீங்கள் மக்களிடையே தீர்ப்பு வழங்கினால் நீதத்துடன் தீர்ப்பு வழங்குங்கள். நிச்சயமாக, அல்லாஹ் உங்களுக்கு வழங்குகின்ற அறிவுரை மிக உன்னதமானதாகும். நிச்சயமாக, அல்லாஹ் அனைத்தையும் செவியுறுபவனாகவும், உற்று நோக்குபவனாகவும் இருக்கின்றான்.” [அல்குர்ஆன் - சூறா 4, வசனம் 58]**

இந்த வசனம் இரு கடப்பாடுகளைக் கொண்டுள்ளது. முதலாவது, அமானிதமானவற்றை அவர்களுக்குரியவர்களிடம் திருப்பிக் கொடுத்துவிடுவது இரண்டாவது, நீதமுடன் தீர்ப்பளிப்பது. இங்கு ‘நம்பிக்கை’ என்பதனை ‘நீதமுடன் தீர்ப்பளித்தல்’ என்பதற்கு முன்பதாக கூறப்பட்டிருப்பதன் காரணம், சில பொருள்கோடல்களின் படி, குர்ஆன் மற்றவர்கள் மீதான பொறுப்பிற்கு முதல் தன் மீதான பொறுப்புடன் ஆரம்பிக்கிறது என்பதாகும்.

மேலதிகமாக, முஸ்லிம் சட்டத்தை தீர்ப்பளிக்கும் முறைமையானது, திருமணம் என்பது ஆண்களுக்கும், பெண்களுக்குமிடையே, அன்பையும், கருணையையும் (மவத்தா வரஹ்மா), கலந்தாலோசனையையும், பரஸ்பர ஒப்புதலையும் (தஸாவுர் வதராதி), இரக்கம் (இஹ்ஸான்), மற்றும் கண்ணியம் (கராமாஹ்) என்பவற்றைப் பகிர்ந்து கொள்ளும் சமமான இருவர்களுக்கிடையிலானது என்பதனை அங்கீகரித்தல் வேண்டும். எனவே, சட்டத்திலும், அதன் நடைமுறையிலும் இந்த இஸ்லாமியக் கொள்கைகளுடன் பொருந்தும் வகையில் சமத்துவமானது குடும்ப நீதிமன்ற முறைமையில் உத்தரவாதப்படுத்தப்படல் வேண்டும். வினைத்திறனான, நீதியான, பாரபட்சமற்ற சட்ட முறைமையின் நிர்வாகத்தின் ஊடாகவே நீதியினை அடைந்து கொள்ள முடியும்.

### 3.அரசியலமைப்பு



நீதியையும், சமத்துவத்தையும் உறுதிப்படுத்த வேண்டிய கடப்பாடு இலங்கை அரசிற்கு உண்டு. இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 12(1), “சட்டத்தின் முன் யாவரும் சமம் மற்றும் சட்டத்தின் முன் சமமான பாதுகாப்பிற்கு அனைவரும் உரித்துடையவர்” என்கிறது. உறுப்புரை 12(2), “எந்தவொரு பிரசையும் இன, மத, மொழி, சாதி, பால், அரசியல் அபிப்பிராயம், பிறப்பிடம் அல்லது இத்தகைய எந்தவொரு அடிப்படையிலும் பாரபட்சத்திற்கு உள்ளாக்கப்பட முடியாது” என்கிறது. இதன் அர்த்தமாவது, இலங்கை அரசானது, நடபடிசார் விடயங்கள் உள்ளடங்கலாக குடும்ப சட்ட நீதிமுறைமைகளுக்கான தரத்திலும் - பிரசைகளுக்கான சமமான நடாத்துகையை உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதாகும்.

### 4. சர்வதேச மனித உரிமைகளுக்கான சட்டகங்கள்

பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாரபட்சங்களையும் இல்லாதொழிப்பதற்கான சமவாயத்தினை (CEDAW) இலங்கை 1981இல் ஏற்றங்கீகரித்துள்ளதுடன், குறிப்பாக அரசியல், சமூக, பொருளாதார, கலாசார துறைகள் உட்பட அனைத்து துறைகளிலும் பெண்களது முழுமையான மேம்பாட்டிற்கும், முன்னேற்றத்திற்கும் சட்டத்திருத்தம் உள்ளடங்கலாக பொருத்தமான அனைத்து வகையான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டிய கடப்பாட்டினை அது கொண்டுள்ளது. 2017இல், CEDAW செயற்குழுவானது, இன்றளவும் பெண்களுக்கு நீதியை அணுகுவதிலுள்ள தடைகள் மற்றும் சட்டத்துறையிலுள்ளவர்களிடம் காணப்படும் பால்நிலை சமத்துவம் தொடர்பிலான மட்டுப்படுத்தப்பட்ட அறிவு என்பன பற்றிய பிரச்சினைகளை எழுப்பியிருந்தது.

2019 இல், திருமணம் மற்றும் குடும்ப உறவுகளில் சமத்துவத்திற்கான பெண்களது உரிமைகளை மேம்படுத்துவதில் நீதித்துறையின் வகிபங்கு பற்றிய கொழும்புப் பிரகடனத்தில், அனைத்து நீதித்துறை அலுவலர்களும் நீதித்துறை முறைமையில் ஈடுபட்டுள்ள அனைவரும் குடும்ப, திருமணம் தொடர்பான விடயங்கள் உட்பட அனைத்து விடயங்களிலும் அடிப்படை மனித உரிமைகளுடன் இணங்கி நடத்தல் வேண்டும் என அழுத்திக் கூறப்பட்டது. பால்நிலை பற்றிய விழிப்புணர்வுடனும், பால்நிலை பற்றிய கூருணர்வுடனும் இருக்கவும், நீதிமன்ற அறையானது நிவாரணம் தேடிவரும் பெண்களுக்கு விரோதமான, அச்சுறுத்தக் கூடிய சூழலாக இல்லாமலிருப்பதனை உறுதிப்படுத்தவும், தரப்பினரதும், பிள்ளைகளதும் அந்தரங்கத்தினைப் பாதுகாக்கவும் இம்முறைமைக்குப் பொறுப்புண்டு.

## C. நல்லதொரு குடும்பச் சட்ட முறைமையின் கூறுகளும், அதற்கான அளவுகோலும்

இதனை மனதில் கொண்டு, நல்லதொரு குடும்பச் சட்ட முறைமையில் இருக்க வேண்டிய குறித்த தேவைப்பாடுகள் பற்றி நாம் உன்னிப்பாக அவதானித்தோம். இதன்படி, நீதியை அணுகுவதற்காக அமுலில் இருக்கின்ற சட்டகங்கள் பின்வரும் மூன்று கூறுகளையும் அடையாளங் காண உதவின. 1.நீதிக்கான அணுகுதல் 2.( பொருண்மை) சட்ட ஏற்பாடுகளில் நியாயம் 3.நடபடி முறையில் நியாயம்

ஒவ்வொரு கூறினையும் அடைந்து கொள்வதற்கான அளவுகோலை விபரமாக விளக்குவதற்காக இந்த மூன்று கூறுகளையும் கையாண்டுள்ளோம்.

| கூறுகள் | அளவுகோல்கள் |
|---|---|
| **நீதிக்கான அணுகுதல்** | முறைமையொன்றில் பின்வரும் இயல்புகள் இருக்குமாயின் நீதிக்கான அணுகுதல் காணப்படும் எனச் சொல்லப்படுகிறது.<br><br>1. **பௌதீகரீதியாக அணுகக் கூடியதாகவும், மொழிரீதியாக அணுகக் கூடியதாகவும் இருத்தல்**<br>2. **பாதுகாப்பு**<br>3. **செலவைத் தாங்கக் கூடியதாக இருத்தல்**<br>- கட்டணமற்ற அல்லது குறைந்த செலவிலான படிமுறைகள் மற்றும் வலுவான சட்ட உதவித் திட்டங்கள்<br>4. **விரோத மனநிலையற்றது, குடும்ப நேயமுடையது (அந்தரங்கத்தை பேணக் கூடிய தன்மை உள்ளடங்கலாக)**<br>தீர்வுகளை அல்லது உடன்பாட்டினை அடைந்து கொள்ளத்தக்க விசாரணை அணுகுமுறையே குடும்பப் பிணக்குகளுக்குத் தேவையாகவுள்ளன - இவ்வணுகுமுறை தரப்பினருக்கிடையே பிணக்குகளும், கசப்புணர்வும் வளர்வதைத் தூண்டாமல் இருப்பதனை உறுதி செய்வதுடன், துணைவர்களதும், பிள்ளைகளதும் அதிசிறந்த நலனையும் பேணுகிறது. இது ஆபத்தினையும், தீங்கினையும் குறைக்கின்றதொரு அணுகுமுறையாகும்.<br>5. **சுய பிரதிநிதித்துவத்திற்கான தெரிவு**<br>தரப்பினர் தமது அனுபவத்தையும், கண்ணோட்டத்தையும் வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் (ஆகக் குறைந்தது -ஆரம்ப மத்தியஸ்த கட்டத்தில்)<br>6. **பால்நிலைசார் கூருணர்வு**<br>பெண்களதும், சிறுமிகளதும் வாழ்வியல் யதார்த்தங்கள் கருத்திலெடுக்கப்பட வேண்டிய முக்கிய விடயங்கள். |
| **சட்ட (பொருண்மை) ஏற்பாடுகளிலான நியாயம்** | ஒப்புரவான நீதி என்பது இஸ்லாத்தில் ஆழப் பொதிந்துள்ளதொரு கொள்கையாகும். திருத்தப்பட்ட MMDA ஆனது, இஸ்லாமிய சட்டவியலுடன் இயைந்திருத்தல் வேண்டும் என்பதுடன், முறைமையானது, இஸ்லாமிய சட்டவியல், மற்றும் நீதி, கண்ணியம், நியாயம் ஆகிய கொள்கைகளுக்கான அங்கீகரிப்புடன் MMDA இல் சொல்லப்பட்டபடி, இஸ்லாமிய தரங்களைப் பிரயோகித்தல் வேண்டும். அதாவது, சட்டத்தைப் பிரயோகிக்கையில் நியாயமும், பொருத்தப்பாடும் இருக்க வேண்டும் என்பதனை இது குறிக்கிறது. |
| **நடபடி முறையில் நியாயம்** | முறைமையானது குறிக்கப்பட்ட நடைமுறைகளையும், வழக்குகளுக்கான நியாயமான அதிகபட்ச கால எல்லையையும், வலுவானதொரு மேற்பார்வை செய்யும் பொறிமுறையினையும் கொண்டிருத்தல் வேண்டும். இது நீதித்துறையின் தற்றுணிபினை மட்டுப்படுத்தும் என்பதுடன், நியாயமானதொரு காலப்பகுதிக்குள் தீர்மானங்கள் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்தும். |



**“மேலும், அவன் வானத்தை உயர்த்தினான். தராசை நிலைநாட்டினான். நீங்கள் தராசில் நீதி தவறிவிடக் கூடாது என்பதற்காக. ஆகவே, நீதியுடன் மிகச் சரியாக நிறுங்கள். தராசில் எடைக் குறைவை ஏற்படுத்தாதீர்கள்.”**
குர்ஆன்: சூறா 55, வசனம் 7-9

## D. இரு முறைமைகளதும் வாழ்வியல் யதார்த்தங்களை ஒப்பீடு செய்தல்

காதி முறைமையும், மாவட்ட நீதிமன்ற முறைமையும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்களவு வித்தியாசமானவை. இவையிரண்டும் எவ்வாறு குடும்ப விடயங்களில் தீர்ப்பளிக்கின்றன என்பதைக் கருத்திலெடுப்போம். பின்வரும் அவதானங்கள், முஸ்லிம் பெண்களது சமகால வாழ்வியல் யதார்த்தங்கள், சட்டத்தரணிகளின் அனுபவங்கள் மற்றும் இவ்விரு முறைமைகளும் நடைமுறையில் எவ்வாறு இயங்குகின்றன என்பது பற்றிக் கிடைக்கக் கூடியதாயிருக்கின்ற ஆய்வுகளிலிருந்தும் பெறப்பட்டவையாகும்.

இம்முறைமைகளை 1. நீதிக்கான அணுகுதல் 2. சட்ட ( பொருண்மை)ஏற்பாடுகளிலான நியாயம் 3. நடபடிமுறையில் நியாயம் எனும் அடிப்படையில் மதிப்பீடு செய்திருக்கிறோம்.

*கீழுள்ள அட்டவணையில் பெட்டியின் நிறங்கள் பின்வருவனவற்றைக் குறித்து நிற்கின்றன.

**பச்சை (நேர்மறையான கூறுகள்) மற்றும்**
**ரோஸ் (எதிர்மறையான கூறுகள்)**

### 1.நீதிக்கான அணுகுதல்

**கரிசனைக்குரிய பரப்பு: பௌதீகரீதியான அணுகல்**
**(அமைவிடத்திற்கான தூரம், அணுகலுக்கு எடுக்கும் நாட்கள், நேரம் மற்றும் மொழி)**

| காதி முறைமை | மாவட்ட நீதிமன்றம் |
|---|---|
| (பச்சை) • 65, பகுதி நேர காதிகள் காணப்படுகின்றனர்<br>• ஒரு காதி அண்ணளவாக 30,000 நபர்களுக்கு பணியாற்றுகிறார்<br>• மக்கள் தங்களது மொழித் தெரிவின் அடிப்படையில் சேவைகளை நாடுகின்றனர். அதிகமாக, தமிழ் பேசுகின்றனர் | (பச்சை) • முழுநேர அடிப்படையில் 54 மாவட்ட நீதிமன்றங்கள் காணப்படுகின்றன<br>• மிக அண்ணளவாக 300,000 நபர்களுக்குச் சேவையாற்றுகிறது என்பதுடன் அனைத்து குடியியல் வழக்குகளையும் (காணி, காசு அறவிடுதல், மரணசாசனம், ஏனையவை) கையாள்கிறது<br>• வெளிப்படையான, நிலையான அணுகுதலைக் கொண்டிருக்கிறது - வேலைக்கான வாரநாட்கள் அனைத்திலும் திறந்திருக்கும்<br>• கட்டிடம் மற்றும் ஏனைய வசதிகளை அரசு வழங்குகிறது |
| (ரோஸ்) • காதிகள் வரையறுக்கப்பட்ட, எதிர்வு கூற முடியாத நேரசூசியை வைத்திருக்கின்றனர். அவர்களது தற்றுணிவில் அவை மாற்றப்படுகின்றன. றமழான் (நோன்பு) மாதத்தில் அவர்களை இலகுவில் அணுக முடியாது. அத்துடன் அமர்வு நாட்களில் எதுவித நிலையான தன்மையும் இல்லை<br>• கட்டிடம் மற்றும் ஏனைய வசதிகள் அரசால் வழங்கப்படுவதில்லை. சில காதிகள் தங்களது வேலையை தமது சொந்த வீடுகளிலிருந்தே செய்கின்றனர். சிலர் பொதுக்கட்டிடத்தின் ஒரு பகுதியில் இருந்து செய்கின்றனர் | (ரோஸ்) • தமிழ் பேசும் மக்கள் பெரும்பாலும் அவர்களது தெரிவின் அடிப்படையில் சேவைகளை அணுக முடியாது. |

**கரிசனைக்குரிய பரப்பு: பௌதீகரீதியான பாதுகாப்பு**

| காதி முறைமை | மாவட்ட நீதிமன்றம் |
|---|---|
| (ரோஸ்) • காதிகளுக்கும், காதிகளுக்கு முன்பாக சமுகமளிக்கும் மக்களுக்கும் பாதுகாப்பை வழங்குவதில் காதி முறைமை தோல்வியடைந்துள்ளது. | (பச்சை) • மாவட்ட நீதிமன்ற முறைமை மக்களுக்கும், நீதிபதிகளுக்கும் பௌதீகரீதியான பாதுகாப்பை வழங்குகிறது. |

## D. வாழ்வியல் யதார்த்தங்களை ஒப்பீடு செய்தல் ... தொடர்ச்சி...

### கரிசனைக்குரிய பரப்பு: செலவைத் தாங்கக் கூடியதாக இருத்தல்

| காதிமுறைமை | மாவட்ட நீதிமன்றம் |
|---|---|
| • இலவசமான அல்லது செலவு குறைந்த முறைமை (காதி மட்டத்தில்)<br>• காதி மட்டத்தில் சட்டப் பிரதிநிதித்துவம் தேவைப்படுத்தப்படவில்லை என்பது, வழக்கினைத் தொடங்கவும், முடிக்கவும் நடவடிக்கை சார்ந்து எதுவித செலவையும் வைக்காது என்பதாகும்.<br>• எவ்வாறாயினும், காதியின் முடிவினை எதிர்த்து மேன்முறையீடு செய்யப்படுகையில் சட்டப் பிரதிநிதித்துவம் தேவைப்படுகின்றது என்பதுடன் பொருளாதாரரீதியாக வளமுடன் இருப்பவர்கள் (பொதுவாக ஆண்கள்) சட்ட முறைமையினால் மறுபடியும் சலுகையுடையவர்களாக ஆக்கப்படுகிறார்கள்<br>• விண்ணப்பங்களிற்கும், வழக்கை எடுத்துநடாத்தவும் காதிகள்காசு வாங்கிய, வழக்கைத் துரிதப்படுத்த இலஞ்சம்வாங்கிய பல சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. | • செலவு கூடியது<br>• மாவட்ட நீதிமன்றின் முன் வழக்கொன்றை ஆரம்பிக்க ஒரு சட்டத்தரணியின் தேவையிருப்பது என்பது, வழக்குக்கான செலவுகளை மக்கள் தாங்கக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும் என்பதைக் காட்டுகிறது. இது மக்களைத் தடுக்கக் கூடிய ஒரு காரணியாகவும் அமையலாம். அது மட்டுமன்றி பொருளாதாரரீதியாக பலம் கூடியவர்கள் சிறந்த சட்டப் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்வார்கள் என்பதுவுமாகும்.<br>• சட்ட உதவி தேவைப்படுகின்ற அனைவருக்கும் தரமான சிறந்த சட்ட உதவிகளை வழங்கப்படுவதனை உறுதி செய்யத்தக்கவாறு சட்ட உதவி முறைமைகள் அபிவிருத்தி செய்யப்படவில்லை |

### கரிசனைக்குரிய பரப்பு: தீர்ப்பளிப்பின் அணுகுமுறை:

குடும்பப் பிணக்குகளுக்குத் தீர்வுகள் அல்லது சமரசத்தை அடைந்து கொள்ளத்தக்க விசாரணை அணுகுமுறையே தேவையாகவுள்ளது என்பது நன்கு நிறுவப்பட்டதொரு விடயம். இது, நடபடிமுறையானது தரப்பினருக்கிடையே பிணக்குகளையும், கசப்புணர்வையும் வளர்க்காமலிருப்பதனையும், பிள்ளைகளது அதிசிறந்த நலனைப் பேணுவதையும் உறுதி செய்வதற்கானதாகும். அபாயத்தினையும், தீங்கினையும் குறைப்பதற்கானதொரு அணுகுமுறையாகும்.

| காதிமுறைமை | மாவட்ட நீதிமன்றம் |
|---|---|
| • காதி, மேற்சொன்னவாறான விசாரணை முறையினை மேற்கொள்ள தேவைப்படுத்தப்பட்டுள்ளார் (ஊக்கமானதொரு வகிபங்கெடுத்து காதி தேவையான தகவல்களைத் தரப்பினரிடமிருந்து திரட்டி முடிவினை எடுத்தல் வேண்டும்)<br>• காதிமுறைமையில் எதிராளி- பகையாளி அணுகுமுறையினை தாம் அனுபவிப்பதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.<br>• மேலும், குடும்ப பிணக்கினைத் தீர்ப்பதற்கு இத்தகைய விசாரணை முறைமையினை காதி முறைமை உத்தரவாதப்படுத்துவதில்லை.<br>• சில மாவட்டங்களில் இச் செயன்முறையில் பள்ளிவாசலுக்கான செயற்குழு போன்ற மூன்றாம் தரப்பினரும் ஈடுபடுகின்றனர். | • மாவட்ட நீதிமன்றம் எதிராளி - பகையாளி அணுகுமுறையினை எடுக்கின்றது (நீதிமன்றம், தரப்பினர் ஒருவருடன் ஒருவர் மோதிக்கொள்ள அனுமதிக்கின்றது. திருமணம் மற்றும் குடும்ப விடயங்களைக் கையாள்வதற்கு இது சிறந்த அணுகுமுறை அல்ல. |

## D. வாழ்வியல் யதார்த்தங்களை ஒப்பீடு செய்தல் ... தொடர்ச்சி...

### கரிசனைக்குரியபரப்பு : முறைசார்ந்த எதிர் முறைசாராத

இரு முறைமைகளுமே பொதுமக்களுக்கான அணுகுதல், செயன்முறையை மக்கள் விளங்கிக் கொள்ளத்தக்கதான தகவல்களை வழங்குதல், அதன் மூலம் வழக்கு தொடர்பாக ஒரு யதார்த்தமான காலஎல்லையை எதிர்பார்த்தல் போன்றவற்றை வழங்குவதில் தோல்வி கண்டுள்ளன.

| காதிமுறைமை | மாவட்ட நீதிமன்றம் |
|---|---|
| • காதி முறைமை சட்டத்தரணிகளை அனுமதிப்பதில்லை. அதாவது மக்கள் தங்களுக்காக தாங்களே பேசிக் கொள்ள வேண்டும். அவர்களது கதைகள் பொதுவாக அவர்களிடமிருந்து அந்நியப்படுத்தப்படும் சட்ட மொழிக்கு மாற்றப்படுவதில்லை. மேலும், அவர்கள் சார்பாக என்ன சொல்லப்பட்டது என்பதனை துல்லியமாக அவர்கள் அறிந்திருப்பதையும் இது குறிக்கிறது. | • முறைசார்ந்த தன்மையானது இருதரப்பினரும் செவிமடுக்கப்படுதல் உட்பட நடபடிரீதியான நியாயத்தை உறுதிப்படுத்துகிறது. |
| • எவ்வாறாயினும், இந்த முறைசாராத தன்மை அநேகமாக பெண்களை பேச அனுமதிக்காமையையும் குறிக்கிறது (காதியால் பேச அனுமதிக்கப்படுவதில்லை). முறைசாராத வகையில் மேற்பார்வையின்றிய முறைமையானது ஊழலுக்கும், துஸ்பிரயோகத்திற்குமே இட்டுச் செல்கிறது. | • சட்ட செயன்முறையினதும் விவாதங்களினதும் முறைசார்ந்த தன்மை மக்களை பெரும்பாலும் அந்நியப்படுத்துகிறது. |

### கரிசனைக்குரிய பரப்பு: பால்நிலை பற்றிய கூருணர்வு

| காதிமுறைமை | மாவட்ட நீதிமன்றம் |
|---|---|
| • பால்நிலை பற்றிய கூருணர்வின்மை<br>• பால்நிலை பற்றிய கூருணர்வினை உறுதிப்படுத்துவதற்கு எத்தகைய நடவடிக்கைகளும் இன்மை | • பால்நிலை பற்றிய கூருணர்வின்மை<br>• பால்நிலை கூருணர்வு தொடர்பான பயிற்சிகளை வழங்குவதற்கு நீதித்துறைசார் பயிற்சிகள் வழங்கப்பட முடியுமாயினும், அவை வினைத்திறனான வகையில் பயன்படுத்தப்படுவதில்லை |

## 2. சட்ட (பொருண்மை) ஏற்பாடுகளிலான நியாயம்

### கரிசனைக்குரிய பரப்பு: சட்டக் கொள்கைகளது நியாயமானதும், நிலையானதுமான பிரயோகம் மற்றும் சட்டம் எவ்வாறு பிரயோகிக்கப்படுகின்றது என்பதும்

| காதிமுறைமை | மாவட்ட நீதிமன்றம் |
|---|---|
| • காதிகளுக்கு எதுவித பயிற்சியும் இல்லை என்பதுடன் எதுவிதமான தகைமையோ அல்லது அனுபவமோ இருக்க வேண்டிய தேவையும் இல்லை<br>• காதி தன்னிச்சையான தரங்களுடன் செயற்படுவதாகவும், நீதியற்ற முடிவுகளை எடுப்பதாகவும், இது இம்முறைமையில் அறவே எதிர்பார்க்க முடியாத விளைவுகளை கொண்டு வருவதாகவும் சாட்சியங்களும், ஆய்வுகளும் காட்டுகின்றன<br>• விண்ணப்பங்களை வழங்குவதற்கு காசு வாங்கியமை, செலுத்தப்பட்ட பராமரிப்புத் தொகையைக் கொடுக்காமல் வைத்திருந்தமை, விவாகரத்தை வழங்குவதற்காக இலஞ்சம் வாங்கியமை போன்று காதிகளால் புரியப்படும் ஊழல் மற்றும் இலஞ்சம் தொடர்பாக முறையிடப்பட்ட (நீதிச் சேவை ஆணைக்குழுவிடம் உட்பட) ஆவணப்படுத்தப்பட்ட பல வழக்குகள் காணப்படுகின்றன. | • பயிற்றுவிக்கப்பட்ட, தகைமை வாய்ந்த நீதி அலுவலர்கள்.<br>• பயிற்சி, அனுபவம் மற்றும் விதிக்கப்பட்ட தரங்களையும், முன்னுதாரணங்களையும் பின்பற்றுவதன் விளைவாக, சட்டமானது எதிர்பார்க்கத்தக்க வகையில் மாவட்ட நீதிமன்றில் பிரயோகிக்கப்படுகிறது. |

## D. வாழ்வியல் யதார்த்தங்களை ஒப்பீடு செய்தல் ... தொடர்ச்சி...

### 3. நடபடி முறையிலான நியாயம்

#### கரிசனைக்குரிய பரப்பு: தாமதம்

| காதிமுறைமை | மாவட்ட நீதிமன்றம் |
| --- | --- |
| • விவாகரத்து விடயத்தில் காதிகள் பொதுவாக குறித்த காலத்துக்குள் தீர்வளிக்கின்றனர் | • நீண்ட காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக சவாலுக்குட்படுத்தப்படாத விவாகரத்தை உடனே வழங்குமளவு வளர்ச்சி கண்டுள்ளது |
| • குறிப்பாக கடுமையாக எதிர்க்கப்படும் விடயங்களால், விவாகரத்தை நிலைநிறுத்துவதில் நீடித்த தாமதம். குறிப்பாக, காதியின் பஸாஹ் உத்தரவுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படுகையில் இது பெண்களை பெரிதும் பாதிக்கின்றது.<br>• காதிகள் சபையிலும் எக்கச்சக்கமானளவு வழக்குகள் நிலுவையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.<br>• விவாகரத்து தொடர்பான தீர்மானங்களைத் தாமதிக்கின்றனர் என்பதுடன், பராமரிப்பு தொடர்பான உத்தரவுகளை நிறைவேற்ற மறுக்கின்றனர். | • குறிப்பாக கடுமையாக எதிர்க்கப்படும் விடயங்களால், விவாகரத்தை நிலைநிறுத்துவதில் நீடித்த தாமதம் |

#### கரிசனைக்குரிய பரப்பு:
#### - பயிற்றுவிக்கப்பட்ட, அனுபவமுடைய மேற்பார்வையுடனான தீர்ப்பளிப்பவர்கள்
#### - சட்டம் எவ்வாறு பிரயோகிக்கப்படும் என்று முன்கூட்டியே அனுமானிக்கக் கூடியதன்மை

| காதிமுறைமை | மாவட்ட நீதிமன்றம் |
| --- | --- |
| • காதிகளுக்கு எதுவித பயிற்சியும் வழங்கப்படுவதில்லை. எதுவித தகைமையோ அல்லது அனுபவமோ இருத்தல் வேண்டும் என்ற தேவைப்பாடும் இல்லை.<br>• காதி தன்னிச்சையான தரங்களுடன் செயற்படுவதாகவும், நீதியற்ற முடிவுகளை எடுப்பதாகவும், இது இம்முறைமையில் அறவே எதிர்பார்க்க முடியாத விளைவுகளை கொண்டு வருவதாகவும் சாட்சியங்களும், ஆய்வுகளும் காட்டுகின்றன<br>• விண்ணப்பங்களை வழங்குவதற்கு காசு வாங்கியமை, செலுத்தப்பட்ட பராமரிப்புத் தொகையைக் கொடுக்காமல் வைத்திருந்தமை, விவாகரத்தை வழங்குவதற்காக இலஞ்சம் வாங்கியமை போன்று காதிகளால் புரியப்படும் ஊழல் மற்றும் இலஞ்சம் தொடர்பாக நீதிச் சேவை ஆணைக்குழுவிடம் உட்பட முறையிடப்பட்ட ஆவணப்படுத்தப்பட்ட பல வழக்குகள் | • பயிற்றுவிக்கப்பட்ட, தகைமை வாய்ந்த நீதி அலுவலர்கள்<br>• பயிற்சி, அனுபவம் மற்றும் விதிக்கப்பட்ட தரங்களையும், முன்னுதாரணங்களையும் பின்பற்றுவதன் விளைவாக, சட்டமானது எதிர்பார்க்கத்தக்க வகையில் மாவட்ட நீதிமன்றில் பிரயோகிக்கப்படுகிறது |

## E. பின்னணியைப் புரிந்து கொள்வதற்காக அதைப் பற்றியுள்ள புனைவுகளைப் பற்றிப் பேசுதல்

பின்னணியைப் புரிந்து கொள்ளல் முக்கியமானது. பின்னணியைப் புறந்தள்ளிவிட்டு ஆதர்சமான அல்லது விருப்பிற்குரிய நிலைப்பாட்டை எடுத்து அதற்காக வாதிடல் சுலபமானதெனினும், MPLRAG ஆக்கபூர்வமான, அர்த்தபுஷ்டியுள்ள தீர்வுகளில் நம்பிக்கை கொண்டுள்ளது. இவ்விவாதங்களின் போது எழுந்த பிரதானமான சில கேள்விகளுக்கான எமது பதில்களில் இப்பின்னணி பற்றிய எமது புரிதலை அடையாளங் கண்டு கொள்ளலாம்.

### 1. காதி முறைமை ‘தெய்வீக’ ஷரீஆ சட்டத்தின் அடிப்படையிலானதா? அது இலங்கை முஸ்லிம் அடையாளத்தின் ஒரு பகுதியா?



இலங்கையில்பிரித்தானிய காலனித்துவவாதிகளினால் 1929 ஆம் ஆண்டு உத்தியோகபூர்வமாக காதி முறைமை அறிமுகப்படுத்தப்பட்டு, 1937 இல் அமுல்படுத்தப்பட்டது. அதிலிருந்து, அரசும், தீர்மானமெடுக்கும் பதவிகளிலிருந்த முஸ்லிம்களும் இதனை மேற்பார்வை செய்வதற்கோ, அதற்கான தரங்களை அறிமுகப்படுத்துவதற்கோ எதுவிதமான நிலைபேறான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. 2016 ஆம் ஆண்டின் ஆய்வொன்று, சில காதிகளுக்கு MMDA பற்றி எதுவும் தெரிந்திருக்கவில்லை, அவர்கள் எதுவிதமான முறையான தகைமையையும் கொண்டிருக்கவில்லை என்பதுடன், அவர்களுக்கு சாதாரண தர இஸ்லாம் பாடம் வரை மட்டுமே தெரிந்திருந்தது என வெளிப்படுத்தியிருந்தது. காதி முறைமையானது, இலங்கையின் முஸ்லிம் சமூகங்களது அடையாளத்தின் ஒரு முக்கிய அம்சம் என்ற கோரிக்கை தவறானது. இலங்கை முஸ்லிம் பெண்களைக் கைவிட்ட ஒரு முறைமை, இலங்கை முஸ்லிம்களது அடையாளத்தின் ஒரு அம்சமாக இருக்க முடியாது.

ஆரம்ப காலங்களில் தீர்ப்பளிப்பவர் “காதி” என்ற பெயரில் அறியப்பட்டார் என்பதுடன் பெரும்பாலும் அவரொரு “முஜாஹித்” (இஸ்லாமிய சட்டத்தைப் பற்றிய அறிவும், பெரும்பாலும் அனைத்து சட்ட சிந்தனைப் பள்ளிகளைப் பற்றிய அறிவும் உடையவர் என ஏற்கப்பட்டவர்) ஆக இருக்க வேண்டும் என்பது தேவைப்பாடாக இருந்தது. சட்ட முறைமைகள், குடியியல் மற்றும் குற்றவியல் சட்டங்கள் என்பவற்றின் வளர்ச்சியானது, காதியின் வகிபங்கில், அதாவது பாரம்பரியமாக இஸ்லாமிய சட்டவியல் அல்லது பிக்ஹ் சார்ந்த முறைமைகளில் மாற்றத்தை ஏற்படுத்தியது.

இஸ்லாமிய நீதிபதி (காதி) என்ற பாரம்பரிய சிந்தனை போலன்றி, தற்போது, இலங்கையில் காதி என்ற பதவிக்கு எதுவிதமான தகுதியோ (பயிற்சிகளும், தகைமைகளும்), நோக்கெல்லையோ (இஸ்லாமிய சட்டவியலை பொருள்கோடல் செய்யக் கூடிய தேவைப்பாடு) இல்லை. எனவே, காதி முறைமை, பாரம்பரியமாக சமயத்தை அடிப்படையாகக் கொண்ட செறிவான நிறுவகமும் அல்ல; இலங்கையின் முஸ்லிம்களது அடையாளம் என அர்த்தமுடன் கோரப்படக் கூடியதுமல்ல.

### 2.காதிமுறைமையினை தரமுயர்த்துவது உதவக் கூடுமா? காதிமுறைமையினை தரமுயர்த்துதல் சாத்தியமா?



தரமுயர்த்துதல் என்பது பல விடயங்களுக்குத் தீர்வு காணுவது – பயிற்சி, அடிப்படை தகைமைகளுடனான ஆட்சேர்ப்பு, மற்றும் நியாயமான ஊதியத்தை வழங்குவதற்காக அரச வளங்களை முதலிடுதல், உதவிக்கு அலுவலர்களைச் சேர்த்தல், பாதுகாப்பான கட்டிடம் மற்றும் ஏனைய வசதிகள் போன்றன.

தீர்ப்பளிப்பதில் காதி முறைமையினைத் தரமுயர்த்துதல் நிர்வாகரீதியான பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையும் என்ற வாதமானது ஆர்வத்தையூட்டுகிறது. ஏனெனில், உண்மையில் அவ்வாறு அமையக் கூடும். எவ்வாறெனினும், இம்முறைமையினை தரமுயர்த்துவதற்கான முதலீடு செய்யப்படக் கூடுமா என்பதனை மதிப்பீடு செய்வது மிக முக்கியம். துரதிஸ்டவசமாக, தற்போதுள்ள காதிமுறைமையினை தரமுயர்த்துவதற்கு எதுவிதமான அரசியல் விருப்பும் இல்லை என்பதனை நாம் அவதானிக்கிறோம். உண்மையில், பல வருடங்களாக ஆட்சியிலிருந்து வந்த அரசாங்கங்களினாலும், முஸ்லிம் சமூகத் தலைவர்களினாலும் இந்த தரமுயர்த்தல் செய்யப்படவில்லை என்பதுடன், இறுக்கமான மேற்பார்வையும் நடாத்தப்படவில்லை என்ற தொடர்ச்சியான கையறுநிலை மிக முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.


## E.பின்னணியைப் புரிந்து கொள்வதற்காக அதைப் பற்றியுள்ள புனைவுகளைப் பற்றிப் பேசுதல்... தொடர்ச்சி...

### 3. காதி முறைமையில் உள்ள பிரச்சினைகளுக்கு மாவட்ட நீதிமன்றம்தான் தீர்வா?

மாவட்ட நீதிமன்றமானது குடும்பநேய உட்கட்டமைப்பையோ அல்லது நடைமுறையையோ வழங்குவதில் தோல்வி கண்டுள்ளது என்பதனை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். அதேசமயம் இந்நீதிமன்றானது, முற்கூட்டியே தகவல்களை அறிந்து அணுகுவதற்கான வசதி, பாதுகாப்பு என்பவற்றோடு, பொருண்மைச் சட்டத்தை நிலையாகப் பிரயோகிப்பதற்கான திறனையும் கொண்டுள்ளதுடன், நடபடி முறைகளை வரையறுத்து, வலுவானதொரு மேற்பார்வைக்கான பொறிமுறையையும் கொண்டுள்ளதனையும் நாம் அங்கீகரிக்கின்றோம். MMDA இற்கான, அல்லது எந்தவொரு குடும்ப விடயத்திலும் பொருத்தமான தளமாக மாவட்ட நீதிமன்றம் வருவதற்கு, பின்வருவன கவனத்தில் எடுக்கப்படல் வேண்டும்: **பௌதீகரீதியான மேம்படுத்தப்பட்ட அணுகல், மத்தியஸ்தத்துக்கான வாய்ப்புகளுடனான விசாரணை நடபடி முறைகள், அந்தரங்கம், தம் கருத்துக்களை தமது சொற்களில் தமது மொழியில் வெளிப்படுத்துவதற்கான சந்தரப்பம், பால்நிலை கூருணர்வு, மற்றும் வழக்குகளுக்கான கால எல்லையை நிர்ணயித்து தாமதத்தினைக் குறைத்தல்**


### 4. கட்டாயமாக ஒரு முஸ்லிம்தான் MMDA இன் கீழ் தீர்ப்பளிக்க வேண்டுமா?

சட்டமானது, தகுதிவாய்ந்த எந்தவொரு நீதி அலுவலராலும் பிரயோகிக்கப்படலாம். இன்றும், மேன்முறையீட்டு நீதிமன்றிலும், உச்ச நீதிமன்றிலும் நீதிபதிகளால் (அவர்களது சமய நம்பிக்கையைக் கருத்தில் கொள்ளாது) இச்சட்டம் பிரயோகிக்கப்படுகின்றது. 1931 ஆம் ஆண்டு தொட்டு முஸ்லிம் மரணசாசன வழியுரிமைக் கட்டளைச் சட்டம் மாவட்ட நீதிமன்றத்தினால் ஆளப்பட்டு வருகின்றது. (திருத்தப்பட்ட) MMDA இனைப் பொறுத்தளவில், பயிற்றுவிக்கப்பட்ட, தகைமையுடைய, ஒரு முஸ்லிம் இருந்து நீதிமன்றத்திற்குப் போவதற்கு முன்னரான மத்தியஸ்த விடயங்களில் ஈடுபடுவது பிரயோசனமாக இருக்கும். இது குறித்த தரப்பினருடைய பழக்க வழக்கங்கள், சடங்குகள் மற்றும் அவர்களது செயற்பாடுகளில் பொதிந்துள்ள அர்த்தங்கள் உள்ளடங்கலாக அவர்களது பிணக்கு தொடர்பான தனிப்பட்ட விபரங்களை இந்த மத்தியஸ்தரோடு பகிர்ந்து கொள்வது, தரப்பினர் சௌகரியமாக உணர உதவக் கூடும்.



## E.MPLRAG இனது நிலைப்பாடு

எப்போதும் போல, MPLRAG, முஸ்லிம் பெண்களதும், சிறுமிகளதும் வாழ்வியல் யதார்த்தங்களை மையமாக வைக்கிறது. நீதியை, சமத்துவத்தை, நியாயத்தை, கண்ணியத்தை வழங்குவதற்கு ஒரு முறைமைக்குள்ள தகைமையே முக்கியமே தவிர அதன் பெயர் அல்ல. மேலே பகுத்தாய்ந்தவாறு, குடும்பப் பிணக்குகளுக்குத் தீர்ப்பளிக்க உதவக் கூடிய கூறுகளை உடையதாக உள்ளபோதும், தற்போதுள்ள காதி முறைமையானது நீதி, சமத்துவம், நியாயம் அல்லது கண்ணியம் என எதையுமே வழங்குவதில்லை என்பது தெளிவு. அது, அனுசரணையுடன் இயங்குகின்ற, நீதியற்ற, சமத்துவமற்ற, ஊழல் நிறைந்ததொரு முறைமை என்பதனை நிரூபித்துள்ளதுடன், முற்றுமுழுதான மாற்றத்தை வேண்டி நிற்கின்றது. நடைமுறையிலுள்ள முறைமையானது, குடும்ப நீதிமன்ற முறைமையால் பதிலீடு செய்யப்படல் வேண்டும்.



**"இறை நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்காக வாய்மையில் நிலைத்திருப்போராயும், நீதிக்குச் சான்று வழங்குவோராயும் திகழுங்கள்! எந்தவொரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள பகைமை உங்களை நீதியிலிருந்தும் பிறழச் செய்து விடக் கூடாது. நீங்கள் நீதி செலுத்துங்கள். இதுவே இறையச்சத்திற்கு மிகப் பொருத்தமானது...."**

குர்ஆன்: சூறா 5, வசனம் 8

## MPLRAG இனது நிலைப்பாடு பின்வருமாறு:

1

குடும்ப நீதிமன்றத்தின் ஸ்தாபிப்பு - அனைத்து (பொது மற்றும் தனியார் சட்ட) குடும்ப விடயங்களையும் விசாரிப்பதற்கான முதன்மை அதிகாரத்தைக் கொண்டு இது ஸ்தாபிக்கப்படுவது திருத்தத்தின் அறுதியான இலக்காக இருத்தல் வேண்டும்.

2

இடைக்காலத்தில் - முழுமையாக செயற்படக்கூடிய ‘குடும்ப நீதிமன்றம்’ நிறுவப்படும் வரை, மாவட்ட நீதிமன்றம் MMDA (சட்டரீதியாக திருத்தப்பட்டதை)இனை பிரயோகிக்க முடியும். இதற்கான நியாயமானது, மாவட்ட நீதிமன்றமே அனைத்து குடியியல் வழக்குகளதும் முதன்மை நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கிறது என்பதுடன், தற்போது மரணசாசனத்துக்கும், பிள்ளைகளது பாதுகாவலுக்கும் அணுகக் கூடியதாக உள்ள இந்நீதிமன்றிற்கு, முஸ்லிம்கள் இந்த நாட்டின் சம பிரசைகளாக, சமமான அணுகுதலுக்கான உரிமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

எவ்வாறாயினும், குடும்பச் சட்டத்தைப் பிரயோகிப்பதாயின் தற்போதைய மாவட்ட நீதிமன்றம் மேம்படுத்தப்பட வேண்டும் என்பது தவிர்க்கப்பட முடியாததாகும். மொழிசார் அணுகுதல், செலவினைத் தாங்கக் கூடிய சக்தி, அந்தரங்கம், தகவல்களை அறிவதற்கான விசாரணை அணுகுமுறை மற்றும் நேரகாலத்துக்குள் தீர்ப்பு வழங்கப்படுவதனை உறுதி செய்தல் போன்றவற்றை உள்ளடக்கிய மேம்படுத்தலுக்கான உறுதியான, குறுகிய மற்றும் மத்திம கால இலக்குகள் காணப்படல் வேண்டும்.

3

MMDA இன் பிரயோகத்திற்கு வினைத்திறனானதும், செயற்திறனுடையதுமான குடும்ப மத்தியஸ்தம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அணுகுதல், செலவைத் தாங்கக் கூடியதாக இருத்தல், சொந்த சொற்களில், மொழியில் தன் கருத்தை வெளிப்படுத்துவதற்கான வெளி ஆகிய கூறுகள் காணப்படல் வேண்டும். மத்தியஸ்தர்களாக, பெண்கள் மற்றும் ஆண்கள் சரியான முறையில் தகைமையுடையவர்களாக, பயிற்சி அளிக்கப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும் என்பதுடன் மேற்பார்வை செய்யப்படலும் வேண்டும். மேலும், இவர்கள் குடும்ப மத்தியஸ்தத்தின் உயர்தரத்தினைப் பேணுதல் வேண்டும். முஸ்லிம் துணைவர்களுக்கு முஸ்லிம் மத்தியஸ்தர்கள் இருத்தல் வேண்டும். காதி முறைமையானது பௌதீகரீதியான அணுகல், செலவைத் தாங்கும் திறன், தமது சொற்களில், மொழியில் கருத்தை வெளிப்படுத்தக் கூடிய வெளி என்பவற்றைக் கொண்டிருப்பதனால் அவை பயிற்சி, மேற்பார்வை, மற்றும் தரநிர்ணயம் போன்றவற்றில் உள்வாங்கப்படலாம்.

**இருமையான (காதி உண்டா அல்லது இல்லையா) என்ற தெரிவுக்கான விவாதத்தினை, குடும்பத்துக்குள் அனைவருக்கும் நீதியையும், சமத்துவத்தையும் ஊக்குவிக்கக் கூடிய வினைத்திறனானதொரு குடும்ப நீதிமன்ற முறைக்கான ஆழமான கலந்துரையாடலாக மாற்றுவதற்கு இதுவொரு வரலாற்று சந்தர்ப்பம்.**

**அனைத்து இலங்கையர்களுக்கும் குடும்ப நீதிமன்றம் என்ற இலக்கை நோக்கி நகர்வோம்.**



# குடும்ப நீதிமன்ற முறைமையொன்றைக் கற்பனை செய்தல்




**திருமணப் பிணக்குடனான முஸ்லிம்**

**பாதை 1: ஒருவர் அல்லது இருவரும் பிரிய நினைத்தல்**

**பாதை 2: ஒருவர் அல்லது இருவரும் விவாகரத்தை நாடுதல்**

**பயிற்றுவிக்கப்பட்ட முஸ்லிம் நபர்களால் குடும்ப மத்தியஸ்தம்**



ஒரு மத்தியஸ்தர் அனைத்து தரப்பினரையும் திருப்திப்படுத்தக் கூடிய வகையில், தரப்பினர் ஒரு உடன்பாட்டிற்கு வருவதற்கு உதவி புரிவார். ஒரு மத்தியஸ்தர் பிணக்கிற்கான தீர்வினை எடுக்க மாட்டார். தரப்பினர் விவாகரத்தை தொடர முடிவு செய்தால் மாவட்ட நீதிமன்றிற்குச் செல்வர்.

**பரஸ்பரம் பிரிய அல்லது எதிர்க்க தெரிவு செய்தல்**

சில வழக்குகளில் நீதிமன்றம் மத்தியஸ்தத்திற்கு சிபாரிசு செய்யக் கூடும் அல்லது நீதிமன்றில் வழக்கிருக்கும்போது தரப்பினருக்கு இணக்கமொன்றிற்கு வருவதில் ஆர்வமிருப்பின் தாம் விரும்பும் எக்கட்டத்திலும் மத்தியஸ்தத்தினைத் தெரிவு செய்ய முடியும்.

**முதல் கட்ட குடும்ப நீதிமன்றம்**




**நீதிமன்றம் பின்வருவனவற்றைத் தீர்மானிக்கும்:**

- **விவாகரத்து**
- **பராமரிப்பு**
- **வீட்டு வன்முறை**
- **ஜீவனாம்சம்**
- **பிள்ளைகளின் பாதுகாவல்**
- **திருமணச் சொத்து**
- **வழியுரிமை**

சமரசம் செய்து கொள்வதனைத் தெரிவு செய்தல்

தரப்பினருக்கிடையில் நியாயமானதும், கண்ணியமானதுமான பிரிவு





## REFERENCES AND RESOURCES


1.Access to Justice Measurement Framework - A2JBC Working Group https://ajrndotco.files.wordpress.com/2018/03/a2jbc-measurementframework.pdf
2.Report of Committee Appointed to Consider Amendments to MMDA, 2018
3.Inside the Quazi Courts of Sri Lanka by Ermiza Tegal and Hasanah Cegu Isadeen (2021) published by CHANGE Humanitarian Organization, Puttalam.
4.The Quazi Court System in Sri Lanka and Its Impact on Muslim Women' (2011)by Saleem Marsoof and Muslim Women's Research and Action Forum (MWRAF)
5.'Unequal Citizens - Muslim women's struggle for justice and equality in Sri Lanka' (2016) by Hyshyama Hamin and Hasanah Cegu Isadeen
6.Muslim Marriage & Divorce Act of Sri Lanka (1951)
7.'Muslim Family Law in Sri Lanka: Theory, Practice and Issues of Concern to Women' (1999) by Chulani Kodikara - Muslim Women's Research and Action Forum (MWRAF)/Women Living Under Muslim Law (WLUML)
8.'Is Equal Justice Possible?' (2014) – Safana Gul Begum and Islamic Women's Association for Research and Empowerment (IWARE), Batticaloa, Sri Lanka
9.Parallel Systems of Personal Laws in Sri Lanka (1997) – Ramani Muttetuwagama and Muslim Women's Research and Action Forum (MWRAF)
10.CEDAW Concluding Observations for Sri Lanka 2017
11.Colombo Declaration https://www.iwraw-ap.org/wp-content/uploads/2019/04/The-Colombo-Declaration.pdf


இலங்கையின் அனைத்து முஸ்லிம் பெண்களுக்கும் சமத்துவத்தையும், நீதியையும் உறுதிப்படுத்தும் வகையில் **MMDA** ஆனது முழுமையாகவும், உடனடியாகவும் திருத்தப்படல் வேண்டும்.
**www.mmdasrilanka.org/demands/**

STANDING FIRM FOR JUSTICE
MPLRAG
Muslim Personal Law Reform Action Group
SRI LANKA

www.mmdasrilanka.org
@mplreforms
@mplreforms
@mplreformslk